**காற்றாலை மின் உற்பத்தி செயற்திட்டம் - 2019**

---

காற்றாலை மின் உற்பத்தி செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு செயற்திட்ட நிர்வாக கைநூலின் V (ஈ) பிரிவிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் இலங்கை மின்சார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 நவம்பர் 22 ஆம் திகதிய 3585-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02 ஆம் பிரிவின் IV ஆம் உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. இலங்கையில் தூய்மையானதும் நம்பிக்கைத்தன்மையுடையதுமான மின் உற்பத்தியை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 39,923.06 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 256.70 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 31,104.84 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 8,818.22 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 56.70 மில்லியன் மிகுதி தொகை இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2018 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான

குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்கீட்டுக் குறைபாடு | தொகை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கமரா மற்றும் லென்ஸ் (Camera and Lence) உபகரணம் நிலையான சொத்துக்களாக இனங்காணப்படுவதற்குப் பதிலாக செலவினங்களாக இனங்காணப்பட்டிருந்தன. | 240,925 | பதிவுகள் காணப்படாததன் காரணமாக இச் சொத்து தவறாக பயன்படுத்தப்பட முடியும். | பிஎம்யூ ஆல் கொடுப்பனவு சீட்டு பதிவு மேற்கொள்ளப்படும் போது DSLR கமராவின் (ரூபா 240,925) கொள்வனவானது செலவினங்களாக (E4200 - தளபாடம் மற்றும் உபகரணம்) பதிவு செய்யப்பட்டிருந்தன. இத் தவறு இனங்காணப்பட்டு 2020 ஏப்ரல் மாதத்தில் நிதிக்கூற்றுக்களில் சீர்செய்யப்பட்டிருந்தன. | சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்படுவதை தவிர்ப்பதற்காக செயற்திட்ட சொத்துக்களாக பதிவு செய்யப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

- செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகள் 2018 யூன் 31 இல் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இணக்கச் சிக்கல்களிற்கேற்ப பெறுகை செயன்முறையிலுள்ள தாமதங்கள் காரணமாக 2019 மார்ச் 25 இலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஆகையால் மீளாய்வாண்டிற்காக கடன்வழங்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 13,364 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 72.64 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மற்றும் இலங்கை மின்சார சபையால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 320 மில்லியன் தொகையான பங்களிப்பு என்பவற்றில் முறையே 13.9 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,860.09 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 10.28 மில்லியன் தொகை மற்றும் 170.67 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 546.14 மில்லியன் தொகை என்பன மாத்திரமே மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும் இலங்கை மின்சார சபையால் மேற்கொள்ளப்பட்ட பாதீட்டு பங்களிப்பானது பிரதானமாக காணி சுவீகரிப்பு தொடர்பான ரூபா 104.65 மில்லியன் செலவினங்கள் பாதீட்டு ஒதுக்கீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காதமை மற்றும் ரூபா 83.72 மில்லியன் மேலதிக சுங்கத் தீர்வை கொடுப்பனவு போன்றன காரணமாக ரூபா 226.14 மில்லியனை விஞ்சியிருந்தது.

- சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் 48.34 சதவீதமாக காணப்பட்டதுடன் இது 65.75 சதவீத எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றத்தை விட குறைவாக காணப்பட்டது. பதிற்கடமை அடிப்படையில் இலங்கை மின்சார சபையின் ஊழியர்களால் செயற்திட்ட பணிப்பாளர் மற்றும் கணக்காளர் போன்ற இரண்டு முக்கிய பதவிநிலைகளின் கடமைகள் மேவுகை செய்யப்பட்டமை மற்றும் பொறியியலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் கள பதவியணியினரின் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை என்பன தாமதங்களிற்கான பிரதான காரணங்களாகும்.

- 42 காணித்துண்டுகளில் 20 காணித்துண்டுகள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ஏனையவை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

- 2019 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட திட்டத்தில் pilling வேலைகள், anchor cage நிறுவுதல், காற்றாலை மின்பிறப்பாக்கியின் அடித்தள வேலையின் pile cap என்பன முறையே 63.6 சதவீதம், 40.9 சதவீதம் மற்றும் 44.4 சதவீதம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 22 எண்ணிக்கையில் அடித்தள பின்பக்க நிரப்புதல் வேலைகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

- செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் தங்குமிட கட்டிடத்தின் 40.9 சதவீத சிவில் வேலைகளும் நிர்வாக கட்டிடத்தின் 72.7 சதவீத சிவில் வேலைகளும் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

## 3.2 மனித வள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

| பதவியணி நிலைகள் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | | | |
| செயற்திட்ட பணிப்பாளர் | 1 | 0 | 1 | செயற்திட்ட நடவடிக்கைகள் முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட மாட்டாது. | பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது முகாமைத்துவத்தால் உதவி செய்யப்பட வேண்டிய தொழிற்பாடு ஒன்றாகும். நடுத்தர மட்டம், மேற்பார்வை பதவியணியினர் மற்றும் தொழில்நுட்ப பதவியணியினரை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் சபை அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. | பதவியணி தேவைப்பாடு முறையாக இனங்காணப்பட வேண்டியதுடன் வெற்றிடங்களை உரிய நேரத்தில் நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| செயற்திட்ட பணிப்பாளர் | 1 | 0 | 1 | | | |
| மின்பொறியியலாளர்கள் | 4 | 3 | 1 | | | |
| கணக்காளர் | 1 | 0 | 1 | | | |
| மின் அத்தியட்சகர்கள் | 8 | 4 | 4 | | | |
| சிவில் அத்தியட்சகர்கள் | 4 | 2 | 2 | | | |
| இயந்திரவியல் அத்தியட்சகர்கள் | 3 | 1 | 2 | | | |
| செயலாளர் | 1 | 0 | 1 | | | |
| சாரதிகள் | 10 | 6 | 4 | | | |
| திறனுள்ள கள ஊழியர்கள் | 12 | 0 | 12 | | | |
| திறனற்ற கள ஊழியர்கள் | 4 | 1 | 3 | | | |
| **மொத்தம்** | **48** | **17** | **31** | | | |

**3.3 செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு தொடர்பான விடயங்கள்**

| முக்கிய பதவியணி நிலைகள் | பிஎம்யூ இலுள்ள சேவைக் காலப்பகுதி | ஏனைய நிறுவனங்களில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளாரா | ஒப்பந்த அடிப்படையில்/ பதிற்கடமை அடிப்படையில் வேலைக்கமர்த்தப் பட்டுள்ளமை | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| செயற்திட்டப் பணிப்பாளர் | 14 மாதங்கள் | ஆம் | பதிற்கடமை அடிப்படை | செயற்திட்ட நடவடிக்கைகள் முறையாக கண்காணிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட பணிப்பாளர் 2020 மே இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு – 10 இலுள்ள குறிப்புரைக்காக துணை ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது) | - தாமதமின்றி பதவிநிலைகள் நிரப்பப்பட வேண்டும். |
| கணக்காளர் | 3 ஆண்டுகள் | ஆம் | பதிற்கடமை அடிப்படை | செயற்திட்ட செலவினங்கள் முறையாக கண்காணிக்கப்பட மாட்டாது. அத்துடன் நிதி அறிக்கையிடல் கால வரையறை அடைந்துகொள்ளப்பட மாட்டாது. | | தாமதமின்றி பதவிகள் நிரப்பப்பட வேண்டும். |

## 3.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 1988 திசெம்பர் 31 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவால் செயற்திட்டத்தின் நிலையான சொத்துப் பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தால் சொத்துக்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்படமாட்டாது. | பிஎம்யூ ஆல் அரசாங்க திணைக்களங்களிற்கு வழங்கப்பட்ட மாதிரியில் (1907 இன் 77 ஆம் இலக்க சுற்றறிக்கை) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் எம்டபிள்யூபிபி செயற்திட்டத்திற்காக ஏஎவ்எம் செயற்திட்ட கிளையினால் நிதிக்கூற்றுக்களுடன் சமப்படுகின்ற நிலையான சொத்துப் பதிவேட்டின் excel version பேணப்படுகின்றது. பதிவேட்டிலுள்ள தவறுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் V இ (31) ஆம் பிரிவு | செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்வதற்கு இலங்கை மின்சார சபையால் தனியான பதிவேட்டுக் கணக்கு | செயற்திட்ட செலவினங்கள் தெளிவாக இனங்காணப்படமாட்டாது. அத்துடன் செலவினங்கள் | செயற்திட்ட கிளையின் மேலதிக நிதி முகாமையாளர் தனியான வங்கிக் கணக்கை தவிர்த்து மன்னார் காற்றாலை மின்க்தி | சுற்றறிக்கை தேவைப்பாட்டின் பிரகாரம் தனியான பதிவேட்டுக் கணக்குகள் பேணப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | பேணப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை பதிவுசெய்வதற்கு விசேடமாக தனியான காசுப் புத்தகம் பேணப்படுவதற்குப் பதிலாக செயற்திட்ட பிரிவின் பொதுவான காசுப் புத்தகம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | விடுபடுதலை விளைவிக்கலாம். | செயற்திட்டத்திற்காக தனியான பதிவேடுகள் மற்றும் கணக்குகளின் தொகுதியொன்றை பேணுகின்றார். | |
| (இ) | நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | செயற்திட்ட கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை மின்சார சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கட்டுப்பாடுகள் முறையாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிற்கான விரிவான உள்ளகக் கணக்காய்வு சீஈபீயின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகள் செயற்திட்டக் காலப்பகுதியின் போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய பிஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வுக் காலப்பகுதியின் போது செயற்திட்டம் உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து ரூபா 18,913,212 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரியை (PAYE) கழிக்காமல் அதன் சொந்த நிதியிலிருந்து இதனை செலுத்தியிருந்தது. | செயற்திட்டக் கிரயம் பொருத்தமில்லாத செலவினங்களை மேற்கொள்வதன் மூலம் அதிகரிக்கின்றது. | சீஈபீயின் பொதுவான கொள்கையுடன் இது இணங்குகின்றது. | PAYE ஆனது ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (உ) | நிதிப்பிரமாணம் 751 | செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவால் செயற்திட்டத்தின் பொருளிருப்பு புத்தகம் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளிற்கான சொத்துக்களின் இருக்கும் தன்மை மற்றும் பயன்பாடு என்பவற்றை மெய்மையாய்வு செய்ய முடியாது. | அரசாங்க திணைக்களங்களிற்கான 1907 இன் 77 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் பிஎம்யூ ஆல் பொருளிருப்பு பதிவேடு பேணப்படுகின்றது. பிஎம்யூ ஆல் பொருளிருப்பு பதிவேட்டின் Excel version உம் பேணப்படுகின்றது. பொருளிருப்பு பதிவேட்டிலுள்ள தவறுகளை சீர்செய்வதற்கு பிஎம்யூ ஆல் நடவடிக்கை எடுக்கப்படும். | பொருளிருப்பு புத்தகங்கள் முறையாக பேணப்பட வேண்டும். |